සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

15 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

ක්‍රිස්තියානි ධර්මය I, II
கிறிஸ்தவம் I, II
Christianity I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## கிறிஸ்தவம் I

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✳ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- ✳ **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
- ✳ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றையும் பின்பற்றுக.

**1.** "இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பார்" என இறைவாக்குரைத்த இறைவாக்கினர் யார்?
(1) ஏசாயா (2) மீக்கா
(3) எரேமியா (4) எசேக்கியேல்

**2.** தாவீதின் வழிமரபினத்தைச் சேர்ந்தவர் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
(1) யோசேப்பு (2) சீமோன்
(3) மத்தேயு (4) பவுல்

**3.** காபிரியேல் வானதூதரின் செய்தியை சந்தேகித்தவர்
(1) யோசேப்பு (2) சக்கிரியா
(3) சிமியோன் (4) இடையர்கள்

**4.** இயேசுவைக் காண வந்த ஞானிகள் கொண்டு வந்த பரிசில்களை மட்டும் கொண்ட தெரிவு யாது?
(1) வெள்ளி, சாம்பிராணி, வெள்ளைப்போளம் (2) வெள்ளி, சாம்பிராணி, பொன்
(3) சாம்பிராணி, வெள்ளைப்போளம், சந்தனம் (4) சாம்பிராணி, வெள்ளைப்போளம், பொன்

**5.** யூத வழிபாட்டின் முதன்மை இடமாகக் காணப்பட்டது
(1) எருசலேம் நகரம் (2) சமாரியா நகரம்
(3) பெத்தலகேம் நகரம் (4) நாசரேத் நகரம்

**6.** இயேசு, இறைமகன் எனப் புரிந்துகொள்வதற்கு முன்வைத்த உவமை
(1) கடுகு விதையின் உவமை
(2) விதைப்பவனின் உவமை
(3) திராட்சைத் தோட்டமும் குத்தகைக்காரரும் பற்றிய உவமை
(4) காணாமல் போன மகனின் உவமை

[பக். 2 ஐப் பார்க்க

7. "எந்த அதிகாரத்தால் நீர் இவற்றைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்?" என்ற வினா இயேசுவிடம் எந்த சந்தர்ப்பத்தில் வினவப்பட்டது?
(1) லேவியை அழைத்த சந்தர்ப்பத்திலாகும்.
(2) முடக்குவாதமுற்றவரைக் குணப்படுத்திய சந்தர்ப்பத்திலாகும்.
(3) எருசலேம் ஆலயத்தைத் தூய்மைப்படுத்திய சந்தர்ப்பத்திலாகும்.
(4) நோன்பு பற்றி வினவிய சந்தர்ப்பத்திலாகும்.

8. தமது சொந்த எதிர்பார்ப்புகளைக் கைவிட்டு இறைவனுக்காக விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் பாடுபட்டுச் செயற்பட்ட இருவரைக் கொண்ட தெரிவு யாது?
(1) ஆபிரகாமும் லோத்தும் (2) ஆபிரகாமும் சாராளும்
(3) லோத்தும் மோசேயும் (4) ஆபிரகாமும் மோசேயும்

9. பின்வரும் பண்புகளைக் கருதுக.
A - தம்மிடத்திற்கு வருபவர்களுக்கு மாத்திரம் பணி செய்தல்
B - தமது சீடர்களின் கால்களைக் கழுவுதல்
C - லௌகிக இலாபங்களுக்காக மற்றவர்களின் மீது அதிகாரத்தைப் பிரயோகித்தல்
D - சிறுபிள்ளைகளைப் போல தாழ்மையுடையவர்களாயிருத்தல்
மேற்குறிப்பிட்டவற்றுள் இயேசுவில் காணப்பட்ட சேவக தலைமைத்துவத்தின் பண்புகளைக் கொண்ட தெரிவு யாது?
(1) A, B (2) B, C (3) B, D (4) C, D

10. மூன்றாம் மறைதூதுப் பணியின் பின்னர் பவுல் கைது செய்யப்பட்ட இடம் யாது?
(1) சல்மோன் முனை (2) லிக்கியா நாட்டின் மீரா நகரம்
(3) சைப்பிரசு கடற்கரை (4) எருசலேம் தேவாலயம்

11. இயேசு தமது கைகளை வைத்து தொழு நோயாளரைச் சுகப்படுத்திய சம்பவத்திற்கூடாக இன்றைய சமூகத்திற்கு எடுத்துக்கொள்ளகூடிய படிப்பினை
(1) பல்வகையான நோயாளர்களைத் தேடி பதிவு செய்ய வேண்டும்.
(2) பல்வகையான நோயாளர்கள் சமூகமயப்படுத்தப்படுவதைத் தவிர்த்தல் வேண்டும்.
(3) எய்ட்ஸ் மற்றும் மனநோயாளர்கள் போன்றோரைப் புறக்கணிக்காது நடாத்துதல் வேண்டும்.
(4) நோயாளர்களைப் பராமரிப்பதில் குடும்ப உறுப்பினர்களும் நண்பர்களும் மட்டும் தொடர்புபடுதல் வேண்டும்.

12. பின்வரும் குழுக்களைக் கருதுக.
A - அடிமைகள் B - பெண்கள் C - சதுசேயர் D - பரிசேயர்
மேற்குறிப்பிட்டவற்றுள் யூத சமூகத்தில் உரிய இடம் **வழங்கப்படாத** குழுக்கள் இரண்டும் யாவை?
(1) A, B (2) B, C (3) B, D (4) C, D

13. யாருடைய நம்பிக்கையை அலகையினால் வீழ்த்த **முடியவில்லை**?
(1) யோபுவின் (2) சாலமன் அரசனின்
(3) தாவீதின் (4) சவுல் அரசனின்

14. பிற இனத்தவர் மீது தூய ஆவியானவர் இறங்கிய இடம்
(1) பேதுருவின் வீடு (2) அப்பலோவின் வீடு
(3) தீமோத்தேயுவின் வீடு (4) கொர்னேலியுவின் வீடு

15. இயேசுவின் உயிர்ப்பின் பின்னர் எத்தனை நாட்களில் பெந்தகோஸ்து நாள் கொண்டாடப்படுகிறது?
(1) 07 நாட்களுக்குப் பின்னர் (2) 10 நாட்களுக்குப் பின்னர்
(3) 40 நாட்களுக்குப் பின்னர் (4) 50 நாட்களுக்குப் பின்னர்

16. யூதா தேச மக்கள் பாபிலோனியாவிற்குக் கொண்டு செல்லப்படுவார்களென இறைவாக்குரைத்த இறைவாக்கினர்
(1) எசேக்கியேல் (2) எரேமியா (3) தானியேல் (4) ஆமோஸ்

17. எத்தியோப்பிய நிதி அமைச்சருக்கு (அலி) இறைவார்த்தையை விளக்கிய சீடன்
(1) அந்திரேயா (2) தோமா (3) சீமோன் (4) பிலிப்பு

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

5244

**18.** பின்வரும் குற்றச்சாட்டுகளைக் கருதுக.

A - அவர் தான் கிறிஸ்து எனக் கூறுகின்றார்.
B - அவர் தான் கிறிஸ்து என்னும் அரசர் எனக் கூறுகின்றார்.
C - அவர் மக்களைக் கலகம் செய்யத் தூண்டுகின்றார்.
D - அவர் தன்னை கடவுள் எனக் கூறுகின்றார்.

மேற்குறிப்பிட்டவற்றுள் இயேசுவிற்கு எதிராக ஆளுநர் பிலாத்திடம் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் இரண்டும் யாவை?

(1) A, B (2) B, C (3) B, D (4) C, D

**19.** தீய ஆவிகளை விரட்டும் யூதர்கள், ஸ்கேவாவின் ஏழு புதல்வர்கள் ஆகியோர் இயேசுவின் பெயரைத் தவறாகப் பயன்படுத்தியமையால் அவர்களுக்கு ஏற்பட்ட அழிவிற்கூடாக நாம் கற்றுக்கொள்ளும் செய்தி

(1) தீமைகளும் பொய்களும் அழிந்து போகும்.
(2) மற்றைய மதங்களை நாம் தவறாகப் பயன்படுத்தலாம்.
(3) மந்திர, தந்திரங்களில் பாதுகாப்பு உண்டு.
(4) இறை சக்தியை எமக்கு விருப்பமான முறையில் பயன்படுத்தலாம்.

**20.** 'டுநோமிஸ்' என்பதனால் கருதப்படுவது

(1) சமாதானம் (2) இறைசக்தியின் அடையாளம்
(3) அருள்பொழிவு பெற்றவர் (4) அற்புதங்கள்

**21.** "நீங்கள் நிலத்தின் உப்பு" என்ற இயேசுவின் இவ்வார்த்தைகளுக்கூடாக வெளிப்படுவது யாது?

(1) சமூகத்திற்குப் பாரமில்லாமல் வாழ்தல்
(2) சமூகத்தைச் செழிப்பூட்டுதல்
(3) விண்ணுலகத்திற்கு அடித்தளமிடல்
(4) மற்றவர்களிடமிருந்து பிரிந்து வாழ்தல்

**22.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - "தன்னில் அன்பு கூர்வது போல் பிறரிலும் அன்பு கூர்தல்"
B - "தன்னில் அன்பு கூர்வது போல் இறையரசை அன்பு கூர்தல்"
C - "தமது முழு வாழ்விலும் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்தல்"
D - "தமது அயலவர்களை அன்பு கூர்வது போல் இறையரசை அன்பு கூர்தல்"

மேற்குறிப்பிட்டவற்றுள் அன்பு தொடர்பாக இயேசு கூறிய இரண்டு கூற்றுகளும் யாவை?

(1) A, B (2) A, C (3) B, D (4) C, D

**23.** இயேசுவின் சிலுவைத் தியாக பலியால் நிறைவடைந்தது யாது?

(1) தீங்கு வெற்றியடைதல்
(2) இயேசு தோல்வியடைதல்
(3) தாழ்மை மற்றும் கீழ்ப்படிவின் தற்காலிக வெற்றி
(4) இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்பிற்கு இருந்த தடை நீக்கப்படல்

**24.** இயேசுவின் பிறப்பு பற்றி வானதூதரினால் இடையர்களுக்கு அறிவிக்கப்பட்டதன் மூலமாக வெளிப்படுத்தப்படுவது

(1) சமூகத்தில் இடையர்கள் ஒரு முக்கிய இடத்தை வகித்தார்கள் என்பதாகும்.
(2) நன்கு புரிந்துகொள்ளும் சக்தி அவர்களிடையே காணப்பட்டது என்பதாகும்.
(3) இயேசுவின் பணியானது ஏழைகள் போன்ற மக்களுக்கானது என்பதாகும்.
(4) இடையர்கள் மாத்திரம் கடவுளின் சிறப்புச் சலுகைகளுக்குட்பட்டிருந்தனர் என்பதாகும்.

**25.** இயேசுவால் நிக்கதேமுவிற்குக் கொடுக்கப்பட்ட விடையினூடாக வெளிப்படுவது யாது?

(1) புது வாழ்விற்கு உள்ளார்ந்த மாற்றம் தேவையாகும்.
(2) பிற இனத்தவரை சமத்துவத்துடன் ஏற்றுக்கொள்வது முக்கியமானதாகும்.
(3) பரிசேயனாகிய சீமோனின் செயற்பாடு நிராகரிக்கப்பட்டுள்ளது.
(4) மார்த்தாள் மற்றும் மரியாவின் செயற்பாடுகளைப் பின்பற்ற வேண்டும்.

**26.** "ஓநாய்களிடையே அனுப்புகிறேன்" என இயேசு கூறிய வார்த்தைகளுக்கூடாக வெளிப்படுவது யாது?

(1) எப்பொழுதும் மற்றவர்களைச் சந்தேகத்துடன் பார்க்க வேண்டும்.
(2) குற்றங்கள் செய்பவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.
(3) பாலைநிலத்தில் பயணம் செய்ய வேண்டும்.
(4) துன்பங்கள், சவால்களைச் சந்திக்க நேரிடும்.

[பக். 4 ஐப் பார்க்க

**27.** இனவாதப் பகுபாட்டைக் கடந்து இறை அன்பு வெளிப்படும் கதை
(1) சகேயுவின் கதை
(2) நிக்கதேமுவின் கதை
(3) சமாரியப் பெண்ணின் கதை
(4) மரியா மற்றும் மார்த்தாளின் கதை

**28.** கிறிஸ்துவிற்கும் எமக்குமிடையில் காணப்படும் ஒற்றுமையின் முன்மாதிரியைச் சவாலுக்குட்படுத்தும் சந்தர்ப்பம்
(1) சபை பல்வேறு பிரிவுகளாக பிரிந்திருத்தல்
(2) மற்றைய சமயங்களுடன் ஒத்துழைத்துச் செயற்படல்
(3) கிறிஸ்தவ ஐக்கிய வாரத்தில் ஒன்றாக மன்றாடல்
(4) கிறிஸ்தவர்கள் மற்றைய சபைகளுடன் வழிபாடுகளில் ஈடுபடல்

**29.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - "நீங்கள் வரிதண்டுபவர்களோடும் பாவிகளுடனும் சேர்ந்து உண்பதும் குடிப்பதும் ஏன்?"
B - "நோயற்றவர்களுக்கு அல்ல நோயுற்றவருக்கே மருத்துவர் தேவை."
C - "ஓய்வு நாளில் செய்யக் கூடாதவற்றை நீங்கள் செய்வதேன்?"
D - "மணமகன் மணவிருந்தினரோடு இருக்கும் வரை அவர்களை நோன்பு இருக்கச் செய்யலாமா?"
மேற்குறிப்பிட்டவற்றுள் இயேசுவிற்கும் யூத சமயத் தலைவர்களுக்கும் இடையே ஏற்பட்ட உரையாடல்களில் இயேசுவின் கூற்றுகள் இரண்டும் யாவை?
(1) A, B (2) B, C (3) B, D (4) C, D

**30.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - இயற்கையை சிறந்த முறையில் பேணுவதில் தோல்வியடைந்தமை
B - அபிவிருத்தித்திட்டங்களை உரிய முறையில் செயற்படுத்துவதில் தோல்வியடைந்தமை
C - நிவாரணப் பணிகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதில் தோல்வியடைந்தமை
D - தொடர்பாடலை சிறந்த முறையில் பேணுதல் தோல்வியடைந்தமை
மேற்குறிப்பிட்டவற்றுள் இலங்கை அண்மையில் முகங்கொடுத்த இயற்கை அனர்த்தங்களின் தாக்கத்தை தீவிரமடைய காரணமான மிகப் பொருத்தமான இரண்டு விடயங்களும் யாவை?
(1) A, B (2) B, C (3) B, D (4) C, D

**31.** பவுல் மற்றும் சீலா, பிலிப்பு நகர சிறையில் காட்டிய முன்மாதிரிக்கூடாக கிறிஸ்தவர்கள் கற்றுக் கொள்ளக் கூடிய படிப்பினை
(1) அநீதிக்கு எதிராகச் செயற்படல்
(2) இறை விருப்பத்திற்கு இடம்கொடுத்து, அமைதியாக இருத்தல்
(3) துன்பத்தின் போதும் உண்மைக்குத் தலைசாய்த்துச் செயற்படல்
(4) கிடைக்கும் சந்தர்ப்பங்களைத் தமது சொந்த நன்மைக்காகப் பயன்படுத்தல்

**32.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - சபை அங்கத்தவர்கள், செல்வம் கடவுளின் ஆசி என புரிந்துகொள்ள உதவுதல்
B - ஒரே விதமான சிந்தனையுடையோரை சபையில் சேர்த்துக் கொள்ளல்
C - சபை வளர்ச்சியடையாத இடங்களில் நற்செய்தியை அறிவித்தல்
D - மன்றாடல், கற்பித்தல், ஐக்கியத்திற்கூடாக சபையை வளர்ச்சியடையச் செய்தல்
மேற்குறிப்பிட்டவற்றுள் இன்றைய கிறிஸ்தவ சபைக்கு ஆதிகிறிஸ்தவ சபைக்கூடாகக் கிடைக்கும் சிறப்பு வழிகாட்டல்கள் இரண்டும் யாவை?
(1) A, B (2) B, C (3) B, D (4) C, D

**33.** பல்லின, பல்மத, பல்கலாசாரச் சூழலில் வாழும் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறை எவ்வாறு அமைய வேண்டும்?
(1) எதுவுமே முக்கியமில்லை எனக் கருதி மௌனமாக இருத்தல்
(2) ஆன்மிக வாழ்விற்கு இடையூறாக இருப்பதனால் மற்றவர்களிடமிருந்து பிரிந்து வாழ்தல்
(3) இறை அரசின் பெறுமதிகளைப் பாதுகாத்துக் கொண்டு மற்றையவருடன் சேர்ந்து வாழ்தல்
(4) இறை அரசின் பெறுமதிகளைவிட, மேலானதோர் இடத்தை சமூகச் செயற்பாடுகளுக்கு வழங்குதல்

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**34.** இரத்த உறவுகளுக்கு அப்பாற்பட்ட குடும்ப எண்ணக்கரு தொடர்பான இயேசுவின் போதனை
(1) நாம் வாழும் பிரதேசத்திலுள்ள மக்கள் எல்லோரும் ஒரே குடும்பத்திற்கு உரியவர்கள் என்பதனை ஏற்றுக்கொள்ளல் என்பதாகும்.
(2) சபைக்குள் குடும்ப உறவுகளைப் பலப்படுத்த வேண்டும் என்பதாகும்.
(3) இறை வார்த்தையைச் செவிமடுத்து, அதன்படி செயற்படுவோர் இறை குடும்பத்திற்கு உரியவர்கள் என்பதாகும்.
(4) சபை அங்கத்தவர்கள் எல்லோரும் இறை குடும்பத்திற்கு உரியவர்கள் என்பதாகும்.

**35.** திருமுழுக்கு யோவான், பொது மக்களுக்கு வழங்கிய போதனைகளுக்கூடாக இன்றைய சமூகத்திற்கு எடுத்துக்கொள்ள கூடிய செய்தி
(1) சமத்துவத்துடன் சகலமும் பகிரப்பட வேண்டும் என்பதாகும்.
(2) கடவுள் கொடுப்பதை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டும் என்பதாகும்.
(3) இருப்பவர் இல்லாதவர் மீது அதிகாரம் செலுத்த வேண்டும் என்பதாகும்.
(4) முதலில் எம்மை திருப்திப்படுத்தி பின்னர் மற்றவர்களுடன் மகிழ்வுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதாகும்.

**36.** இயேசு பரிசேயர் மற்றும் மறைநூல் அறிஞர்களை விமர்சித்தாலும், அவர்களுடன் சேர்ந்து அமர்ந்திருந்து உணவருந்தியதை காணக்கூடியதாக இருந்தது. இதனூடாக நாம் விளங்கிக் கொள்வது யாது?
(1) இயேசு அவர்களுடைய செயற்பாட்டை அறிந்திருக்கவில்லை என்பதையாகும்.
(2) இயேசு பாவத்தையன்றி பாவியை வெறுக்கவில்லை என்பதையாகும்.
(3) இயேசு சமயத் தலைவர்களோடு நல்லிணக்கத்துடன் செயற்பட்டார் என்பதையாகும்.
(4) இயேசு அவர்களுக்கிடையே இருந்த விரிசலை சரிசெய்ய முயற்சித்தார் என்பதையாகும்.

**37.** ஆதித் திருச்சபை நலன்புரிப் பணிக்கு உதவியாளர்களைத் தெரிவுசெய்ததை முன்மாதிரியாகக் கொண்டு இன்று சபைத் தலைவர்களை எவ்வாறு நியமிக்க வேண்டும்?
(1) செல்வம், பலம், திறன்கள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டாகும்.
(2) இளமை மற்றும் புகழைக் கருத்திற் கொண்டாகும்.
(3) நட்பு, குடும்பம் மற்றும் சாதியை அடிப்படையாகக் கொண்டாகும்.
(4) தூய ஆவியிலும் ஞானத்திலும் நிறைந்த தன்மையைக் கருத்திற் கொண்டாகும்.

**38.** நீங்கள், உங்கள் சபை பங்குக்குள் ஏழ்மையில் இருப்பவர்களுக்காகச் செய்ய வேண்டிய மிகப் பொருத்தமான செயல் யாது?
(1) வாரம் தோறும் வேதாகமப் பாடங்களை மட்டும் நடாத்துதல்
(2) ஏழ்மை ஏற்படுவதற்கான காரண காரியங்களைத் தேடியறிதல்
(3) சபை வளாகத்தில் பயிர்ச்செய்கைக்கான ஏற்பாடுகளையும் உதவிகளையும் செய்தல்
(4) ஏழ்மையில் இருப்பவர்களுக்குக் குறுகிய காலத்திற்கு மட்டும் உலர் உணவு வழங்குதல்

**39.** பின்வரும் பண்புகளைக் கருதுக.
A - துன்பம் எங்களுடைய வாழ்வின் விதி என ஏற்றுக்கொள்ளல்
B - சுயத்தை ஒழித்து சுயநலமற்ற பணிகளில் இணைதல்
C - துன்புறுதல், மரணம் எல்லோருக்கும் ஏற்படும் என்பதனை ஏற்றுக்கொள்ளல்
D - தாழ்மை, பொறுமை, துன்பப்படல் போன்ற பண்புகளைக் கொண்டிருத்தல்
மேற்குறிப்பிட்டவற்றுள் 'துன்புறும் பணியாளர்' என்பதை முன்மாதிரியாகக் கொள்ளும் கிறிஸ்தவரின் செயற்பாட்டில் காணத்தக்க பண்புகள் இரண்டும் யாவை?
(1) A, B (2) B, C (3) B, D (4) C, D

**40.** பின்வரும் கூற்றுகளில், திருமறையில் குறிப்பிடப்பட்டிருக்கும் 'பொன் விதி' இனைத் தெரிவு செய்க.
(1) "உலக காரியங்களுக்காகத் தேவையில்லாமல் கவலைப்படாதிருங்கள்."
(2) "இயேசு மீண்டும் வருவதை எதிர்பார்த்துக் காத்திருங்கள்."
(3) "பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்."
(4) "அமுக்கி குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள்."

* *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**15 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

ක්‍රිස්තියානි ධර්මය I, II
**கிறிஸ்தவம் I, II**
Christianity I, II

## கிறிஸ்தவம் II

* **முதலாம்** வினாவிற்கும் மேலும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.
* முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** (i) "பெண்களுக்குள் நீர் ஆசிபெற்றவர்..."

(அ) இக் கூற்றைக் கூறியவர் யார்?

(ஆ) இக்கூற்று யாருக்குக் கூறப்பட்டது?

(ii) (அ) யூத சமூக நம்பிக்கைக்கமைய, நற்செய்தியைக் கொண்டுவரும் வானதூதரின் பெயர் என்ன?

(ஆ) அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.

(iii) இயேசு யோர்தான் நதியில் திருமுழுக்குப் பெற்றபோது, தூய ஆவியானவர் இறங்கியதன் மூலம் அறிந்து கொள்ளக் கூடிய **இரண்டு** கருத்துக்களைக் குறிப்பிடுக.

(iv) (அ) "நீர் கடவுளின் மேசியா" எனக் கூறியவர் யார்?

(ஆ) 'கிறிஸ்து' (கிரிஸ்டொஸ்) என்பதன் பொருளை எழுதுக.

(v) இஸ்ரயேல் மக்களுக்கு இறைவன் வழங்கிய பத்துக்கட்டளைகளின் **இரண்டு** பிரதான பகுதிகளையும் எழுதுக.

(vi) (அ) மெய்யியல், கல்வி, இலக்கியம், விஞ்ஞானம், கலைகள் ஆகிய எல்லாவற்றிற்கும் பிரபல்யமான கிரேக்க நகரம் எது?

(ஆ) மெய்யியல் சிந்தனையைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஒரு குழுவினரைக் குறிப்பிடுக.

(vii) (அ) பிலிப்பு நகர பிரதான சிறைக்காவலர் கேட்ட கேள்வி என்ன?

(ஆ) அது யாரிடம் கேட்கப்பட்டது?

(viii) கடவுளின் தூய்மைக்கு முன்னால், இறைவாக்கினர் ஏசாயா கூறிய தமது குறைபாடுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ix) (அ) யோப்பாவில் தராதரம் பாராது பணி செய்தல் தொடர்பான தரிசனத்தை, திருத்தூதர் பேதுரு யாருடைய வீட்டில் கண்டார்?

(ஆ) அந்த வீட்டு உரிமையாளரின் தொழில் என்ன?

(x) (அ) எல்லோரும் கட்டாயமாக உரித்தாகும் முதன்மைச் சமூக அலகு யாது?

(ஆ) "கிறிஸ்து சபைக்குக் காட்டும் அன்பைப் போல் அன்பு செலுத்துங்கள்" என பவுல் யாருக்கு அன்பு செலுத்துமாறு கூறுகின்றார்?

PAST PAPERS WIKI

[பக். 7 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**2.** (i) இஸ்ரயேல் மக்கள் மத்தியில் காணப்பட்ட ஆயர் தொழிலுக்கமைய, ஆயரின் பணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ii) கடவுளின் மந்தைகளாக நாம் செயற்பட வேண்டிய விதம் தொடர்பான **மூன்று** விடயங்களை எழுதுக.

(iii) இயேசுவின் வாழ்வின் முன்மாதிரியைக் கருத்திற் கொண்டு, ஆயர் பணியை நீர் எவ்வாறு சமூகத்தில் நிறைவேற்றுவீர் என்பதனை **ஐந்து** விடயங்களுக்கூடாகச் சுருக்கமாக விவரிக்குக.

**3.** (i) வாய்மொழி பராம்பரியத்தைச் சேர்ந்த மதப்பிரிவினர் யார் என்பதையும் யூத நீதிச் சட்டங்களை எழுதும், கற்பிக்கும் உரிமையைப் பாதுகாத்து வந்த மதப் பிரிவினர் யார் என்பதையும் வெவ்வேறாக எழுதுக.

(ii) பாரம்பரிய மரபுவழிக் கருத்துக்களைப் பின்பற்றிய சதுசேயரில் காணப்பட்ட பண்புகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(iii) இயேசுவிற்கும் வாய்மொழிப் பராம்பரியத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே நடைபெற்ற உரையாடல்களில், கிறிஸ்தவர்களின் வாழ்வின் நன்மைக்காகப் பெற்றுக் கொள்ளக்கூடிய **ஐந்து** குணாதிசயங்களைக் குறிப்பிட்டு, சுருக்கமாக விவரிக்குக.

**4.** (i) (அ) யூத நீதிமன்றத்திற்குத் தலைமைதாங்கியவர் யார்?

(ஆ) யூத நீதிமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாது?

(ii) (அ) யூத நீதிமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய **இரண்டு** குழுக்களையும் குறிப்பிடுக.

(ஆ) இயேசுவானவர் காட்டிக்கொடுக்கப்பட்ட பின்னர், முதலாவதாக எந்த இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார்?

(iii) இன்றைய சமூகத்தில் அநீதியின் மத்தியில் நாம் சரியானதைத் தெரிவு செய்து கொள்ளத்தக்க **ஐந்து** சந்தர்ப்பங்களைச் சுருக்கமாக விவரிக்குக.

**5.** (i) இயேசுவின் உடல் அடக்கம் செய்யப்பட்ட கல்லறைக்கு வாரத்தின் எந்த நாளில் பெண்கள் சென்றார்கள்? அவர்கள் கொண்டு சென்ற பொருட்கள் யாவை?

(ii) அப்பெண்கள் ஆச்சரியப்படும் விதமாக வானதூதர் அவர்களுக்குக் கூறிய **மூன்று** செய்திகளை எழுதுக.

(iii) இயேசுவானவர் உயிருடன் இருக்கின்றார் என அனுபவத்தில் காணும் நீங்கள், அதை மற்றையவருடன் பகிர்ந்து கொள்ளும் விதத்தை **ஐந்து** விடயங்களினூடாகச் சுருக்கமாக விவரிக்குக.

**6.** (i) பவுல் சிறைக் கைதியாக உரோமையை நோக்கிப் பயணம் செய்தபோது, அவருடன் இணைந்துகொண்ட **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக.

(ii) பவுலின் உரோமைப் பயணத்தின்போது முகங்கொடுத்த சவால்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(iii) பின்வரும் ஒவ்வொரு இடத்திலும் பவுல் சந்தித்த ஒவ்வொரு சவாலைக் குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றையும் எவ்வாறு இன்றைய எமது கிறிஸ்தவ வாழ்வோடு தொடர்புபடுத்தலாம் என்பதைச் சுருக்கமாக விளக்குக.

(அ) எருசேலேம் சங்கம்

(ஆ) ஏதென்ஸ்

(இ) லிஸ்திரா

(ஈ) எபேசு

(உ) பெருகை

[பக். 8 ஐப் பார்க்க

7. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டினைத்** தெரிவுசெய்து, அவற்றிற்கென தரப்பட்டுள்ள வழிகாட்டற் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு சிறுகுறிப்பெழுதுக.

(i) சவால் நிறைந்த பணி

- கம்பீரமாகச் சென்ற பயணம்
- எருசலேம் தொடர்பாக அழுது புலம்பல்
- எருசலேம் கோவிலைத் தூய்மைப்படுத்துவதற்கான காரணங்கள்
- எருசலேம் கோவில் தொடர்பான இயேசுவின் போதனைகள்
- எருசலேம் கோவில் தூய்மையாக்கப்பட்டதிலிருந்து நாம் பெற்றுக்கொள்ளத்தக்க செய்தி

(ii) இறை அரசு

- இறை அரசு என்பதன் பொருள்
- இறை அரசிற்கும் உலக அரசிற்கும் இடையிலான வேறுபாடுகள்
- இறை அரசின் பிரஜைகள்
- இறை அரசின் கொள்கைகள்
- இறை அரசைக் கட்டியெழுப்புவதற்கான எமது பங்களிப்பு

(iii) கொள்கை உள்ள மனிதன் ஒழுக்கமுள்ளவனாவான்.

- கொள்கை என்பதன் பொருள்
- இறை அரசின் கொள்கைகளை வெளியிட ஏதுவான காரணங்கள்
- இறை அரசின் கொள்கைகள் வெளிப்படும் இயேசு கூறிய ஒரு உவமை
- அதனூடாக நாம் பெற்றுக்கொள்ளத்தக்க உண்மைகள் (சத்தியங்கள்)
- இறை அரசின் கொள்கை தொடர்பாக எமக்கு வழங்கப்படும் விசேட பொறுப்பு

(iv) எதிர்பார்ப்பு

- தனிப்பட்ட வாழ்வில் ஏற்படும் எதிர்பார்ப்புகள்
- இறை அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து பயணித்த ஆதிபிதாக்கள்
- எதிர்பார்ப்பு தொடர்பான பவுலின் போதனைகள்
- இயேசுவில் எமக்கிருக்கும் எதிர்பார்ப்புக்கள்
- முடிவில்லா வாழ்வைப் பெற்றுக்கொள்ள ஒருவரிடம் இருக்க வேண்டிய மனப்பாங்குகளும் செய்ய வேண்டிய செயற்பாடுகளும்

* * *

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න